பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

07 02 2025 **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பீம்ஸ்டெக் இளையோர் உச்சிமாநாட்டை குஜராத் மாநிலம் காந்தி நகரில் மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா இன்று தொடங்கிவைத்தார்.

- மின்னணு தேசிய வேளாண் சந்தை இணையதளத்தில் நான்காயிரத்து 300 உழவர் உற்பத்தி நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் இந்தியா 100 ஜிகாவாட் சூரியசக்தி நிறுவு திறனை கடந்து சாதனை படைத்திருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவில் இதுவரை 40 கோடி பேர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளனர்.

- சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - சாகேத் மைனேனி இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

**<<<<<<>>>>>>**

பீம்ஸ்டெக் இளையோர் உச்சிமாநாட்டை குஜராத் மாநிலம் காந்தி நகரில் மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா இன்று தொடங்கிவைத்தார்.

காட்மாண்டுவில் கடந்த 2018-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற நான்காவது பீம்ஸ்டெக் உச்சிமாநாட்டில் பேசிய பிரதமர், பீம்ஸ்டெக் இளையோர் உச்சிமாநாட்டை இந்தியா நடத்தும் என்று அறிவித்தார்.

அதன்படி, குஜராத் மாநிலம் காந்தி நகரில் இன்று தொடங்கி, வரும் 11-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள பீம்ஸ்டெக் நாடுகளின் இளையோர் உச்சிமாநாட்டை மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தொடங்கிவைத்தார்.

பீம்ஸ்டெக் நாடுகளின் இளைஞர்களை ஒருங்கிணைக்கும் வகையிலும், அவர்களின் அனுபவங்களை பரிமாறிக்கொள்ளும் தளத்தை உருவாக்கும் வகையிலும் இந்த மாநாடு நடத்தப்படுவதாக திரு மன்சுக் மாண்டவியா கூறினார்.

இளைஞர்களின் ஒருங்கிணைந்த சக்தியை மேம்படுத்தும் வகையிலும், அவர்களுக்கான வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையிலும் இந்த உச்சிமாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>**

மகப்பேற்றின்போது ஏற்படும் உயிரிழப்பு விகிதம் இந்தியாவில் கடந்த 30 ஆண்டுகளில், 83 சதவீதம் அளவுக்கு குறைந்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், உலக அளவிலான மகப்பேறு உயிரிழப்பு விகிதம் 42 சதவீதமாக உள்ளது என்று கூறினார்.

பச்சிளம் குழந்தைகள் உயிரிழப்பு விகிதமும் 69 சதவீதம் அளவுக்கு குறைந்துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த விகிதம் உலக அளவில் 55 சதவீதமாக உள்ளது என்றார்.

மத்திய அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் உயிரிழப்பு தடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு ஜெ பி நட்டா தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மின்னணு தேசிய வேளாண் சந்தை இணையதளமான e-NAM-மில் கடந்த ஆண்டு இறுதிவரை நான்காயிரத்து 300 உழவர் உற்பத்தி நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், இந்த நிறுவனங்களின்மூலம், நான்கு கோடியே 80 லட்சம் விவசாயிகளுக்கு 249 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருப்பதாக கூறினார்.

நாடு முழுவதும் இதுவரை 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேளாண் உற்பத்தி நிறுவனங்கள் தொடங்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த இணையதளத்தில் ஆயிரத்து 400 மின்னணு வேளாண் சந்தைகள் இணைந்துள்ளதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறினார்.

<<<<<<>>>>>

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் உலக அளவில் முன்னிலை வகிப்பதை உறுதி செய்யும் விதமாக, இந்தியா 100 ஜிகாவாட் சூரியசக்தி நிறுவு திறனை கடந்திருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது

புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், எதிர்காலத்தில் பசுமை எரிசக்தியை உறுதி செய்யும் நோக்கில் இந்த சாதனை படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

வரும் 2030-ஆம் ஆண்டிற்குள் புகையில்லாத எரிபொருள் அடிப்படையில் 500 ஜிகாவாட் எரிசக்தி இலக்கை எட்டுவதற்கான முன்னோட்டமாக இந்த நடவடிக்கை அமைந்திருப்பதாகவும் அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவின் எரிசக்தித்துறையின் பயணம் வரலாற்று சிறப்புமிக்க வகையில் அமைந்திருப்பதாக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறையின் அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

அதன்படி, சூரியசக்தி தகடுகள், பூங்காக்கள், கூரைகளில் சூரியசக்தி திட்டங்களை ஏற்படுத்துதல் போன்ற புரட்சிகரமான முன்முயற்சிகளை மத்திய அரசு தொடங்கியிருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரில் அரசு அலுவலகங்கள் மற்றும் அதிகாரிகள் உடனான கலந்துரையாடலில் மக்கள் பிரதிநிதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று அரசு நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது

ஜம்மு காஷ்மீர் அரசு வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில், அடித்தட்டு மக்களின் பிரச்சினைகளை மக்கள் பிரதிநிதிகள் எடுத்துக்கூறுவதற்கு ஏதுவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கும் கோரிக்கைகளை உரிய வகையில் விரைந்து நிறைவேற்ற அதிகாரிகள் முன்வர வேண்டும் என்றும் அதில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது

<<<<<<>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

*(சவுண்ட் பைட் - Song - 8 செகண்ட்ஸ்)*

பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவின் 26-ஆவது நாளான இன்று வரை சுமார் 40 கோடி பேர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியுள்ளதாக உத்தரப்பிரதேச அரசு தெரிவித்துள்ளது.

மகா கும்பமேளாவின் புனித நாட்களாக கருதப்படும் மகரசங்கராந்தி, மௌனி அமாவாசை, வசந்த் பஞ்சமி ஆகிய தினங்கள் முடிவடைந்த நிலையிலும், ஏராளமான சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் வந்து புனித நீராடி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இம்மாதம் 26-ஆம் தேதிவரை மகா கும்பமேளா நடைபெறவுள்ள நிலையில், தினமும் லட்சக்கணக்கானோர் பிரயாக்ராஜ் வந்து நீராடிய வண்ணம் உள்ளனர்.

இதனிடையே, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வரும் 10-ஆம் தேதி பிரயாக்ராஜ் வந்து மகா கும்பமேளாவில் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் மேலும் கூறினார்.

*(சவுண்ட் பைட் - Song - 8 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

தேர்தல் நடைமுறைகளில் சாதகமான சூழலை ஏற்படுத்தும் முயற்சிகள் வருந்தத்தக்கது என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

கர்நாடக மாநிலம் ஹவேரி மாவட்டம் ‘Ranebennur என்ற இடத்தில் நடைபெற்ற இலக்கிய கலாச்சார நிகழ்ச்சியை தொடங்கிவைத்து பேசிய அவர், இந்தியா மிகப்பழமையான, வலுவான ஜனநாயகத்தை கொண்டுள்ளதாக கூறினார்.

உலகிலேயே கிராமப்புறம் தொடங்கி, அனைத்து நிலைகளிலும் ஜனநாயக நடைமுறைகளை கொண்டுள்ள நாடாக இந்தியா திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுபோன்ற ஜனநாயக நாட்டில் தேர்தல் நடைமுறைகளில் ஊடுருவ மேற்கொள்ளப்படும் முயற்சிகள் உண்மையில் வேதனை அளிப்பதாக திரு ஜெக்தீப் தங்கர் கூறினார்.

<<<<<<>>>>>

மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் நேரிட்ட சாலை விபத்தில் ஆறு பேர் உயிரிழந்தனர். 14 பேர் காயமடைந்தனர்.

மான்பூர் என்ற இடத்தில் மினி பேருந்து, இருசக்கர வாகனம் மற்றும் டேங்கர் லாரியும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் இந்தூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

<<<<<<>>>>>

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப் பிரிவு வழங்கும் ‘செய்திச்சுடர்’ நிகழ்ச்சியில், மத்திய பட்ஜெட்டில் சுகாதாரத்துறைக்கான நிதி ஒதுக்கீடு குறித்து திருவண்ணாமலை மாவட்ட மருந்து விற்பனையாளர் சங்க துணைத்தலைவர் திரு சங்கருடன், எமது நெறியாளர் சுமித்ரா ரத்தினம் பங்கேற்ற நேர்காணல் இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>

உக்ரைனுக்கு முதல் தவணை மிராஜ் 2000 போர் விமானங்களை பிரான்ஸ் வழங்கியுள்ளதாக அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு Sebastien Lecornu தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இந்த தகவலை பதிவிட்டுள்ள அவர், ஏற்கனவே இந்த போர் விமானங்கள் உக்ரைன் சென்றடைந்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

எனினும், எத்தனை போர் விமானங்கள் அனுப்பப்பட்டன என்ற விவரத்தை அவர் வெளியிடவில்லை

உக்ரைன் நாட்டின் விமானிகளுக்கு பிரான்சில் பல மாதங்களாக போர் விமான பயிற்சி வழங்கப்பட்ட நிலையில், தற்போது இந்த போர் விமானங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மிராஜ் போர் விமானங்கள் வழங்கப்பட்டிருப்பதை உக்ரைன் அதிபர் திரு ‘Volodymyr Zelensky ’ வரவேற்பு தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

சென்னை ஒபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - சாகேத் மைனேனி இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 7-6, 7-6 என்ற செட் கணக்கில் ஆஸ்திரேலியாவின் Matthew Christoper Romios – தைவானின் Ray Ho இணையை வென்றது.

------------

ஆசிய கோப்பைக்கான பாரா வில்வித்தை போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் குழு பிரிவுகளில் தங்கம் மற்றும் வெள்ளிப்பதக்கங்களை இந்தியா வென்றது.

----------------

Hamburg சர்வதேச செஸ் போட்டி ஜெர்மனியில் இன்று தொடங்கியது.
இந்தியாவின் சார்பில் குகேஷ் இதில் பங்கேற்றுள்ளார்.

-----------

மும்பை ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ‘Prarthana Thombare – நெதர்லாந்தின் Arianne Hartono இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 2-6, 6-4, 10-2 என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் Eden Silva – ரஷ்யாவின் Anastasia Tikhonova இணையை வென்றது.

-------------

சாம்பியன்ஸ் கோப்பை போட்டித்தொடரில் வரும் 26-ஆம்தேதி ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இங்கிலாந்து அணி பங்கேற்கும் என்று அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் உறுதி செய்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் தற்போது ஆட்சியில் உள்ள தாலிபான் அரசு மகளிருக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்து வருவதால், அந்நாட்டுடனான போட்டியை தவிர்க்கப்போவதாக ஏற்கனவே தகவல் வெளியான நிலையில், தற்போது இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் வாரியம் பங்கேற்பை உறுதிபடுத்தியுள்ளது.

<<<<<<END>>>>>